# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

**19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),**
**Egmore, Chennai – 600 008.**
**Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377**
**Email : tnercmail@gmail.com Web site : www.tneo.gov.in**

**முன்னிலை : திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண் 27 / 2016**

திருமதி. த. ராஜேஸ்வரி,
க/பெ தங்கவேல்,
கத்தாளப்பட்டி மற்றும் அஞ்சல்,
கரூர் மாவட்டம். ..... மேல்முறையீட்டாளர்

எதிர்

1) செயற் பொறியாளர்/இ &கா/நகரியம்/கரூர்,
கரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய வளாகம்,
3, கோவை ரோடு, கரூர்–639 002.

2) உதவி செயற்பொறியாளர்/இ&கா/வெள்ளியணை,
கரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 கே.வி. துணை மின் நிலையம்,
வெள்ளியணை , கரூர்–639 118.

3) உதவி பொறியாளர்/இ&கா/தந்தோணிமலை,
கரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 கே.வி. துணை மின் நிலையம்,
தந்தோணிமலை , கரூர்–639 005.

. . . . . எதிர் மனுதாரர்கள்
(திரு. B. சிவக்குமார், செயற் பொறியாளர்/நகரியம்/கரூர் &
திரு. D ரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர்/வெள்ளியணை)

**கேட்புரை நாள் : 16–6–2016**

**ஆணை நாள் : 28–6–2016**

திருமதி. த. ராஜேஸ்வரி, க/பெ தங்கவேல், கத்தாளப்பட்டி அவர்களின் 15.3.2016 நாளிட்ட மனு, மேல்முறையீட்டு மனு எண்.27/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கூறிய மேல்முறையீட்டு மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 16.6.2016 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை**

மேல்முறையீட்டாளரின் நிலத்தில் எதிர் காலத்திலும் மின்கம்பங்கள் புதியதாக அமைப்பதற்கும், இருக்கும் மின்கம்பங்களை மாற்றி அமைப்பதற்கும் அவரின் அனுமதியை பெற்று செய்ய வேண்டும் என்று உத்தரவு இட கோரியுள்ளார்.

**2. வழக்கின் சுருக்கம்**

2.1 மேல்முறையீட்டாளர், அவருக்கு சொந்தமான மணவாடி கிராமத்திற்கு உட்பட்ட கத்தாளப்பட்டியில் சர்வே எண்.474/4 மற்றும் 530/6 ஆகியவற்றில் மின்கம்பங்களை நடுவதற்கும், மின்கம்பங்களை மாற்றி அமைப்பதற்கும் ஆட்சேபனை தெரிவித்து நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார்.

2.2 மன்றம் மனுதார் குறிப்பிட்டுள்ள நிலங்களில் மின் கம்பங்கள் அமைப்பதற்கான விண்ணப்பம் மற்றும் மதிப்பீடு எதுவும் பிரிவு அலுவலகத்தில் இல்லை என்பதால் மேற்கண்ட மனுவை தள்ளுபடி செய்து உத்தவு இட்டுள்ளது.

3. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>

3.1 கரூர் மின்குறைதீர்க்கும் மன்றத்தின் தலைவர் திரு. பொறி. ச. பாலசுப்பிரமணியன், பி.இ. எம்.பி.ஏ அவர்கள் தலைமையில் 17.2.2016 அன்று நடைபெற்ற கூட்டத்தில் 30.12.2015 தேதியிட்ட அவரது மனு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தலைவர் அவர்கள் அவருக்கு கீழ்கண்ட வாக்குறுதிகளை அளித்தார்.

(i) அவருக்கு சொந்தமான நிலத்தில் புல எண்.474/4, 530/6 மின்கம்பங்கள் அமைப்பதற்கான விண்ணப்பம் ஏதும் வராததால் மின்கம்பம் ஏதும் அமைக்கப்படாது.

(ii) மேற்கண்ட நிலத்தில் மின் கம்பங்கள் மாற்றி அமைப்பதற்கான விண்ணப்பம் ஏதும் வராதால் மின்கம்பம் மாற்றி அமைப்பதற்கான எந்த ஆய்வும் நடத்தவில்லை என்றும் கூறினார்.

(iii) மேலும், எதிர்காலத்தில் மின்கம்பம், மின்கம்பங்களை மாற்றி நடவேண்டி விண்ணப்பங்கள் வந்தாலும் மேற்கண்ட புல எண்ணில் உள்ள நிலத்திற்கு உரிமையாளர் என்ற அடிப்படையில் அவர் அனுமதி பெறாமல் ஏதுவும் செய்யமாட்டார்கள் என்றும் கூறினர்.

3.2 மின்குறைதீர்க்கும் மன்றத்தின் தலைவர் திரு. பொறி. ச. பாலசுப்பிரமணியன், பி.இ.எம்.பி.ஏ. அவர்கள் அவர் அளித்த எதிர்காலத்தில் மின்கம்பம், புதிதாக மின் கம்பங்களை மாற்றி நடவேண்டி விண்ணப்பங்கள் வந்தாலும் மேற்கண்ட புல எண்ணில் உள்ள நிலத்திற்கு உரிமையாளர் என்ற அடிப்படையில் அவர் அனுமதி பெறமால் ஏதுவும்

செய்யமாட்டார்கள் என்ற வாக்குறுதி பற்றி கடித்தல் குறிப்பிடாமல் அவரது மனு தள்ளுபடிசெய்யப்பட்டதாக ஆணையத்தில் இருந்து அவருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

3.3 எனவே அவரது கோரிக்கையை ஏற்று அவரது நிலத்தில் எதிர்காலத்திலும் மின் கம்பங்கள் புதிதாக அமைப்பதற்கும் இருக்கும் மின்கம்பங்களை மாற்றி அமைப்பதற்கும் அவர் அனுமதி பெற்று செய்ய வேண்டும் என உத்தரவு இட கோருகிறார்.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>

4.1 கரூர் மின் பகிர்மான வட்டம், நகரிய கோட்டம், வெள்ளியணை உப கோட்டம், தாந்தோணிமலை பிரிவு அலுவலகத்திற்குட்பட்ட கத்தாளப்பட்டியை சேர்ந்த திருமதி. த. ராஜேஸ்வரி, க/பெ தங்கவேல் மணவாடி கிராமம் சர்வே எண்.474/4 மற்றும் 530/6 ஆகியவற்றில் ஏற்கனவே 3 மின் கம்பங்கள் வழியாக மின்சாரம் சென்று கொண்டுள்ளது. மேலும், மேற்கண்ட சர்வே நிலங்களில் மின்கம்பங்கள் அமைப்பதற்கு ஆட்சேபணை செய்துள்ளதை தொடர்ந்து மேற்கண்ட இடத்தில் 19.1.2016 அன்று உதவி மின்பொறியாளர்/இ.கா/தாந்தோணிமலை அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. மேலும், மனுதாரர் கூறியுள்ள நிலத்தில் மின்பாதை அமைப்பதற்கு உண்டான விண்ணப்பங்கள் ஏதும் நாளது தேதி வரை பெறப்படவில்லை.

4.2 மனுதாரர் குறிப்பிட்டுள்ள நிலங்களில் மின்கம்பங்கள் அமைப்பதற்கு விண்ணப்பம் மற்றும் மதிப்பீடு ஏதும் பிரிவு அலுவலகத்தில் இல்லை என்பதால் மேற்கண்ட மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

4.3 மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில் புதிதாக மின்கம்பங்கள் நடுவதற்கும் மாற்றி அமைப்பதற்கும் விண்ணப்பங்கள் பெறப்படும் நிலையில் மனுதாரரின் ஆட்சேபணை

கருத்தில் கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4.4 தற்போது மின்குறைதீர்ப்பாளருக்கு அனுப்பியுள்ள மனுதாரரின் மேல் முறையீட்டு விண்ணப்பம் ஊகத்தின் அடிப்படையிலானது. எனவே, தற்போதைய நிலையில் மனுதாரருக்கு குறைபாடு ஏதுமில்லாத நிலையில் மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## 5. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

5.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 16.6.2016 அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

5.2 மேல்முறையீட்டாளரின் சார்பில் யாரும் கலந்து கொள்ளவில்லை, மேலும், கேட்புரை நாளை ஒத்தி வைக்க வேண்டும் என்றும் கோரிக்கை எதுவும் தரவில்லை.

5.3 எதிர்மனுதாரர்–1 திரு. K. சிவக்குமார், செயற் பொறியாளர்/நகரம்/கரூர் அவர்களும், மற்றும் எதிர்மனுதாரர்–2 திரு. D. ரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர்/வெள்ளியணை அவர்களும் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

## 6. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

6.1 எதிர்மனுதாரர்–1 செயற்பொறியாளர், நகரம், கரூர் அவர்கள் தங்களின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

6.2 கத்தாளப்பட்டியைச் சார்ந்த திருமதி த. ராஜேஸ்வரி அவர்களுக்கு சொந்தமான மணவாடி கிராமம் சர்வே எண்.474/4 மற்றும் 530/6 ஆகியவற்றின் வழியாக ஏற்கனவே மூன்று மின்கம்பங்கள் வழியாக மின்சாரம் சென்று கொண்டிருக்கிறது.

6.3 மேல்முறையீட்டாளர், நிலத்தின் வழியாக மின்பாதை அமைத்து மின் இணைப்பு கோரும் விண்ணப்பங்கள் எதுவும் நாளது தேதிவரை பெறப்படவில்லை.

6.4 மேலும், மின்பாதை மாற்றம் கோரியும் அவரின் நிலத்தின் வழியாக மின் பாதை அமைக்கவும் விண்ணப்பம் மற்றும் மதிப்பீடு எதுவும் நிலுவையில் இல்லை.

6.5 மேலும், மேல்முறையீட்டாளரின் நிலத்தில் புதியதாக மின்கம்பங்கள் நடுவதற்கும், மாற்றி அமைப்பதற்கும் விண்ணப்பங்கள் பெறப்பட்டால் மனுதாரரின் ஆட்சேபனை கருத்தில் கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

6.6 ஆனால், மேல்முறையீட்டாளர் பிற்காலத்திலும் அவரின் அனுமதியின்றி மின்பாதை அவரின் நிலத்தின் அமைக்கமாட்டோம் என்று கோருவது யூகத்தின் அடிப்படையில் என்பதால் அதற்கு அவ்வாறு உறுதி எதுவும் தரமுடியாது என்றும் வாதிட்டுள்ளார்.

7. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

7.1 மேல்முறையீட்டாளர், தனக்கு சொந்தமான மணவாடி கிராமம் சர்வே எண்.474/4 மற்றும் 530/6 ஆகியவற்றில் எதிர்காலத்திலும் மின்கம்பம் புதியதாக அமைப்பதற்கும் இருக்கும் மின்கம்பங்களை மாற்றி அமைப்பதற்கும் அவருடைய அனுமதியை பெற்று செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

7.2 எதிர்மனுதாரர், மனுதாரர் குறிப்பிட்டுள்ள நிலங்களில் மின்கம்பங்கள் அமைப்பதற்கும் மாற்றி அமைப்பதற்கும் தற்பொழுது விண்ணப்பம் மற்றும் மதிப்பீடு எதுவும் பிரிவு அலுவலகத்தில் இல்லை என்றும் மேலும், மேற்கண்ட நிலங்களில் புதியதாக

மின்கம்பம் நடுவதற்கு மாற்றியமைப்பதற்கும் விண்ணப்பங்கள் பெறப்படும் நிலையில் மேல்முறையீட்டாளர் ஆட்சேபனை கருத்தில் கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

7.3 மேலும், மேல்முறையீட்டாளரின் கோரிக்கை அனுமானத்தின் அடிப்படையில் உள்ளது. எனவே, மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

7.4 ஒரு கோரிக்கையின் தீர்வு அந்த நேரத்தில் அமலில் உள்ள விதிகளுக்கு இணங்கதான் இருக்க முடியும் . மேலும், எதிர்காலத்தில் அவ்வாறு ஒரு நிலை வந்தால் அப்பொழுது நடைமுறையில் உள்ள விதிகளின்படிதான் உரிமதாரர் நடவடிக்கை எதுவும் எடுக்க முடியும் என்ற நிலையில் ஊகத்தின் அடிப்படையில் முன்வைக்கப்படும் எதிர்கால கோரிக்கைக்கு தற்பொழுது உறுதி வழங்க வேண்டும் என்பது சரியானது அல்ல என்று நான் கருதுகிறேன்.

7.5 மேலும், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான விதிதொகுப்பின்படி முறையீடு என்பது கீழே கொடுக்கப்பட்டுள்ள குறைகள் பற்றி ஒரு முறையீட்டாளர் எழுத்து மூலமாக சமர்ப்பிக்கப்படுவது.

(i) உரிமம் பெற்றவரால் அளிக்கப்படும் மின்சார பணிகளில் உள்ள குறைபாடு அல்லது குறைவு

(ii) மின்சாரப் பணியில் உரிமம் பெற்றவரின் நியாமற்ற அல்லது கட்டுப்படுத்தப்பட்ட தொழில் பழக்கம்

(iii) மின்சாரம் பயன்படுத்துதல் மற்றும் தொடர்புடைய பணிக்கு ஆணையம் நிர்ணயித்த கட்டணங்களை விட அதிகமாக கேட்பது

(iv) தற்சமயம் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு எதிராக பொது வாழ்க்கைக்கு பாதுகாப்பு அற்றதும் இடர் அளிக்கக்கூடியதுமான மின்சார பணி

7.6 மேற்கண்ட விளக்கத்தின்படி முறையீடு என்பது ஒரு உரிமம் பெற்றவரின் மின்சார பணிகளிலோ அல்லது பாதுகாப்பு விதிகளிலோ அல்லது வசூலிக்கும் கட்டணங்களிலோ உள்ள குறைகளை பற்றியதாக இருக்கவேண்டும். ஆனால், மேல்முறையீட்டாளரின் முறையீடு தற்போதைய குறைபற்றி இல்லை. வரும் காலத்தில் அவ்வாறு ஒரு நிலை ஏற்பட்டால் என்ற ஊகத்தின் அடிப்படையில் உள்ளது. அவ்வாறு ஊகத்தின் அடிப்படையில் எழுப்பப்படும் கோரிக்கை மேற்கண்ட முறையீடு என்ற வரையறைக்குள் வராது என்பதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 8. <u>முடிவுரை</u>

8.1 மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஊகத்தின் அடிப்படையில் உள்ளது என்பதால் மேல்முறையீட்டாளரின் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் மேல் முறையீட்டு மனு எண்.27/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
1) திருமதி. த. ராஜேஸ்வரி,
க/பெ தங்கவேல்,
கத்தாளப்பட்டி மற்றும் அஞ்சல்,
கரூர் மாவட்டம்.

2) செயற் பொறியாளர்/ இ &கா /நகரியம்/கரூர்,
கரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய வளாகம்,
3, கோவை ரோடு, கரூர்–639 002.

3) உதவி செயற்பொறியாளர்/ இ &கா /வெள்ளியணை,
கரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 கே.வி. துணை மின் நிலையம்,
வெள்ளியணை , கரூர்–639 118.

4) உதவி பொறியாளர்/ இ &கா /தந்தோணிமலை,
கரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 கே.வி. துணை மின் நிலையம்,
தந்தோணிமலை , கரூர்–639 005.

5) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்)
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
கரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய வளாகம்,
3, கோவை ரோடு, கரூர்–639 002.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

7) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – <u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.